**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.13/2024 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா.1** |
| Name : | **திருமதி. பிரியா** |
| Father's Name/Husband Name: | **திரு. சத்யராஜ்** |
| Village : | மருவத்தூர் |
| Taluk : | **ஆலத்தூர்** |
| Age : | 29/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 23.10.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி ஆஜர் )**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரி முத்துசாமியைத் தெரியும். ப.சா.2 பாலமுருகன் எனது தம்பி. ப.சா.3 சத்யராஜ் எனது கணவர். சம்பவத்திற்கு முன்பாக எனக்கும் எதிரிக்கும் இடையே வாசல்படி சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எனது கணவர் வேலைக்கு போயிருந்த சமயம் எதிரி என்னை தேவிடியா கண்டாரஓலி வெளியே வா என்று என்னை அசிங்கமாக பேசி திட்டிக் கொண்டே இருந்தார். நான் இந்த விவரத்தை எனது கணவரிடம் சொன்னேன். இது குறித்து என் கணவர் எதிரி முத்துசாமியிடம் கேட்டு தகராறு ஆகிவிட்டது. அதில் எனது கணவர் எதிரி முத்துசாமியை அடித்துவிட்டார். அதனால் எதிரி என் மீதும், என் கணவர் மீதும் வழக்கு போட்டுவிட்டார்கள். கடந்த 09.08.2022 அன்று மதியம் சுமார் 2.30 மணியளவில் சம்பவம் நடக்கும்போது எனது கணவர் வேலைக்கு சென்றுவிட்டார் நான் என் தம்பி பாலமுருகன் மற்றும் குழந்தைகளுடன் வீட்டில் இருந்தபோது, எதிரி முத்துசாமி பின்கதவை திறந்து என்

வீட்டின் முன்புறமாக வந்து தேவிடியா, கண்டாரஓலி, உன்னால என்னை ஊம்பக்கூட முடியாது. உன் புருசன ஜெயிலுக்கு அனுப்பிட்டேன் என்று திட்டி என் முடியை பிடித்து இழுத்து கையால் முதுகில் குத்தி என்னை கீழே தள்ளிவிட்டார். நான் வலி தாங்க முடியாமல் கத்தினேன். என் வீட்டிலிருந்த என் தம்பி மற்றும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் விலக்கிவிட்டனர். எதிரி கீழே கிடந்த கம்பியை எடுத்து என் தம்பி முன்னால் நின்று கொண்டிருந்தபோது, இந்த கம்பியால் உன் அக்காவை கொலை செய்யாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். எனக்கு உள்காயம் ஏற்பட்டதால் நான் மெடிக்கலில் மாத்திரை வாங்கி போட்டுக் கொண்டேன். என் கணவர் வேலைக்கு போய் வந்த பிறகு சம்பவம் குறித்து என் கணவரிடம் சொன்னேன். என் கணவர் காலையில் சென்று மருவத்தூர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார். 10.08.2022 அன்று மருவத்தூர் காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. நான் அளித்த புகார் சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்கண்ட சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரி முத்துசாமியின் மனைவி இரண்டு வருடங்களுக்கு முன்பு மருந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரிதான். அவர் மனைவி இறப்பிற்கு எனது கணவர் மீது தற்கொலைக்கு தூண்டியதற்கான வழக்கு மகிளா நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எதிரிக்கும் எனக்கும், எனது கணவருக்கும் இடையே பிரச்சனை இருப்பது ஊர்க்காரர்கள் மத்தியில் சமரச பேச்சு வார்த்தையில் ஈடுபட்டோம் என்றால் ஈடுபடவில்லை. நான் சொல்வது சரியில்லை என்றாலும் மேற்கண்ட சமரச பேச்சுவார்த்தையில் எனது கணவர் எதிரியிடம் மன்னிப்பு கேட்டார் என்றால் சரியல்ல காவல்நிலையம் சென்று புகார் கொடுத்ததற்கு பின்பு தான் மன்னிப்பு கேட்டார். எதிரியின் கழுத்தில் கத்தியை வைத்து அறுக்க முயன்றதற்கான வழக்கு என் கணவர் மீது நிலுவையில் உள்ளது என்றால் அது பொய் வழக்கு ஆனால் நிலுவையில் உள்ளது. எதிரியின் வீட்டில் உள்ள சிசிடிவி கேமராவை உடைத்ததற்காகவும், எதிரியின் அம்மாவை அடித்ததற்காகவும் எனது கணவர் மீது வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அதுவும் பொய் வழக்கு ஆனால் நிலுவையில் உள்ளது. இவ்வழக்கிற்கு முன்பாகவே மேற்கண்ட வழக்கு சம்பவங்கள்

நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 200 மீட்டர் தூரம் இருக்கும். காவல் நிலையத்தில் இவ்வழக்கு சம்மந்தமாக எதிரி மற்றும் அவரின் வழக்கறிஞரிடம் பேச்சுவார்த்தை செய்தோம் என்றால் சரியல்ல. புகார் எழுத விவரம் தெரியாமல் எனது வழக்கறிஞரிடம் ஆலோசனை கேட்டு புகாரை எழுதினேன் என்றால் சரியல்ல. எதிரி என்னை தலைமுடியை பிடித்து அடித்து கீழே தள்ளி காயம் ஏற்பட்டிருந்தால் நான் மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்றிருப்பேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் எதுவும் நடைபெறாமல் மெடிக்கலில் மருந்துகளை வாங்கி சாப்பிட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்த மெடிக்கலில் சென்று நான் மருந்துகளை வாங்கினேன் என்று எனது புகாரில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் பல மெடிக்கல்கள் இருப்பதால் அதன் பெயர் குறிப்பிடவில்லை. சம்பவம் நடந்தது உண்மையாக இருந்திருந்தால் அருகிலுள்ள காவல் நிலையத்தில் உடனே புகார் கொடுக்காமல் 20 மணிநேரம் காலதாமதம் செய்து புகார் கொடுத்துள்ளேன் என்றால் எனது கணவர் வர இரவாகி விட்டதால் தாமதாக புகார் கொடுத்தேன். நான் புகாரில் சொல்லியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எதிரி அருகாமையில் உள்ள பெட்ரோல் பங்கில் வேலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி தற்கொலைக்கு தூண்டியதற்கான வழக்கு எனது கணவர் மீது இருந்து வருவதாலும், மேற்கண்ட வழக்கு பிரச்சனைகள் தொடர்ந்து எதிரிக்கும் எங்களுக்கும் இருப்பதாலும் எதிரியின் மீது பொய்யாக இவ்வழக்கை நான் தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி தாமாக முன்வந்து எதிரி நானும், எனது மகளும் எங்கள் வீட்டில் வெளியே இருந்து குளிப்பதை சிசிடிவி கேமரா மூலமாக படம் எடுத்து அனைவரிடமும் காட்டிக் கொண்டிருந்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரியின் வீட்டிற்கும் எங்களது வீட்டிற்கும் இடையே 30 அடி ரோடு உள்ளது என்றால் சரியல்ல சின்ன சந்து உள்ளது. மேற்கண்ட சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் எதிரி மீது புகார் கொடுத்திருப்பேன் என்றால் புகார் கொடுத்திருக்கிறேன் ஆனால் நடவடிக்கை

எடுக்கவில்லை. எதிரி என் கணவர் மீது மேற்கண்ட புகார்களை கொடுத்திருப்பதால் எதிரியின் மீது பொய்யாக அவதூறு பரப்புகிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.